[1979 ஏப்ரல் 24

மணம்பூண்டி ஊராட்சியில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி.

* வினா எண் 794—திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம், மணம்பூண்டி ஊராட்சியில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல் நிலைத் தொட்டி கட்டப்பட்டு ஓர் ஆண்டு ஆகியும் குடிதண்ணீர் வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) மேற்படி ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள மேல் நிலைத் தொட்டியின் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:— (அ) ஆம்.

(ஆ) ரூ. 34,000.

நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை விபத்து.

*வினா எண் 795—திரு. ம. அம்பிகாபதி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் தேதி அன்று நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் விபத்து நடந்ததில் மரணமடைந்தோர் எத்தனை பேர் ?

(ஆ) அவர்கள் குடும்பத்திற்கு உதவ அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) நெல்லிக்குப்பம் இ. ஐ. டி. பாரி (இந்தியா) லிட். சர்க்கரை ஆலையில் 1979-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் தேதியில் நடைபெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

1979 ஏப்ரல் 24]

(ஆ) சென்னை தொழிலாளர் துணை ஆணையர்-2 மற்றும் தொழிலாளர்களின் நட்ட ஈட்டு கூடுதல் ஆணையரிடம், தொழிலாளர் காலஞ்சென்ற திரு. பொன்னுசாமியின் குடும்பத்தினருக்கு நட்ட ஈட்டுத் தொகையாக நிர்வாகத்தினர் ரூ. 23,100-ஐ செலுத்தியுள்ளனர். மேற்பார்வையாளர் காலஞ் சென்ற திரு. சச்சிதானந்தத்தின் ஊதியம் ரூ. 1,000-க்கு மேற்படுவதால். தொழிலாளர்களின் நட்ட ஈட்டுச் சட்டத்தின்படி நட்டஈடு வழங்க இயலாததால் அவரது குடும்பத்தினருடன் இது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டில் பொதுவாக தொழிற்சாலைகளில் விபத்துக்களும், மரணங்களும் அதிகமாகி இருக்கிறது என்பதை தொழில் துறை மானியக் கோரிக்கைக் குறிப்புகளில் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி இல்லாமல் வரும் ஆண்டுகளில் இப்படி பட்ட விபத்துக்கள் தவிர்க்கப்பட எத்தகைய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, 500 தொழிலாளர்களுக்கு மேற்பட்டு வேலை செய்யும் தொழிற்சாலைகளில் சேஃப்டி கவுன்சில் என்று வைக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி ஃபேக்டரி இன்ஸ்பெக்டர்ஸ் இன்ஸ்பெக்ஷன் செய்கிறார்கள். எங்கெங்கு விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன என்று அவர்கள் பார்க்கிறார்கள். தொழிற் சங்கத் தலைவர்களும் அதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முயற்சி செய்யும்.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த விபத்து ஏற்பட்ட உடனே சட்ட மன்றத்தில் நான் கிளப்பியபோது மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். காஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய சூப்பிரண்டெண்டிங் இன்ஸ்பெக்டர் ஃபேக்டரிக்குச் சென்று விசாரணை நடத்தி வருகிறார் என்று. அந்த விசாரணையின் முடிவு என்ன ஆயிற்று என்பதை அறிய விரும்புகிறேன்?

அடுத்து சூபர்வைசர் சச்சிதானந்தம் ஒர்க்மேன்ஸ் காம்பென்சேஷன் ஆக்டின் கீழ் வராத காரணத்தால் உயிரிழந்த பிறகும் கூட அவருக்கு உரிய தொகை கிடைக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகையால் சட்டத்தின் விதிகள் ஒரு பக்கம் இருந்தாலும் இப்படிப்பட்ட விபத்து நேர்ந்துவிட்ட காரணத்தா அதிலே மேனேஜ்மெண்ட் பொறுப்பு என்ற காரணத்தால் அதி தொகை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்ப அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல் காஞ்சிபுரம் மேற்பார்வை ஆய்வாளரிடம் இருந்து இன்னும் புலன் விசாரணையினுடைய ரிப்போர்ட் வந்து சேரவில்லை. ஆனால் அந்தத் தொழிலாளரின் குடும்பத்தினருக்கு அதிகத் தொகை கிடைப்பது பற்றி அந்தத் தொழிற்சங்கத் தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேனேஜ்மெண்டுடன் பேச்சு வார்த்தை நடத்தி எவ்வளவு அதிகமாக வாங்கிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக வாங்கிக் கொடுக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளலாம். அத்தோடு அரசு தரப்பிலேயும் அவர்கள் என்ன உதவியை எதிர்பார்க்கிறார்களோ அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை ஓட்டேரிக் கால்வாய் தூர் எடுப்புப் பணி.

*வினா எண். 796—திரு. சு. பாலன் : மாண்புமிகு வேளாண்மைத் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பி அண்டு சி மில் மத்தியில் ஓடும் ஓட்டேரி கால்வாய் மண் நிரம்பிவிட்டதால் சாதாரண மழை பெய்தாலும் சுற்றிலும் உள்ள பகுதிகளிலும் மழை நீர் தேங்கி வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்க அதில் தூர் வாரி இரு கரைகளிலும் தடுப்புச் சுவர் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

ஆம். ஓட்டேரி நல்லாவை அதன் தலைவாயிலிலிருந்து கடைசி வரை சீரமைக்க ரூ. 12·30 இலட்ச ரூபாய் மதிப்பீடு கொண்ட திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வேலை நடைபெற்று வருகிறது.

மாரங்கியரில் தென்பெண்ணை நதிக்கு தடுப்புச் சுவர்

* வினா எண். 797—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் தாலுக்கா யாரங்கியர் கிராமத்தில் தென்பெண்ணை நதிக்கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் உத்தேசம் உண்டா ?